ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2341/32 2023 ජූලි මස 19 වැනි බදාදා 2023.07.19
*2341/32 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் பியகம பிரதேச செயலகப் பிரிவில் அதிகாரி பத்துவ சிறிய பகுதியில் 278 ஏ, பொல்லேகல கிராம அலுவலர் பிரிவில் பொல்லேகல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளார் நாயகத் தினால் தயாரிக்கப்பட்டுள்ள GA/BIY/2019/226 ஆம் இலக்க மற்றும் 2019.05.31 ஆம் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள கீழ் காணப்படும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தையுடைய காணித்துண்டின் எல்லைகள் :

*1.* **துண்டு ‘A’ - பெலவத்த- விஸ்தீரணம்: *0.1381* ஹெக்டயார்**

வடக்கு: வீதி, காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டறிய முடியாதுள்ள காணிப்பகுதி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் சதுப்பு நிலம் மற்றும் பெலவத்த ;கிழக்கு: வீதி, காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டறிய முடியாதுள்ள காணிப்பகுதி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் சதுப்பு நிலம் மற்றும் பெலவத்த ; தெற்கு : சோமலதா குணவர்தன உரிமை கோரும் வெலவத்த ; மற்றும் மேற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உரிமை கோரும் காணிப்பகுதி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் பெலவத்த. என். ஏ. ஆர். பாலித உரிமை கோரும் சதுப்பு நிலம், காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டறிய முடியாதுள்ள காணிப்பகுதி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/18/2018/WS/447.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஏப்பிறல் 10.

EOG 07- 0178